**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண் : 207** **நாள்: 19.12.2018**

**சென்னை மாவட்டத்தில் 2016–17ம் ஆண்டில் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு அதிகக் கடன் வழங்குவதில் சிறப்பாக செயல்பட்ட வங்கி மற்றும் வங்கிக் கிளைகளுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் பாராட்டி விருதுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.**

சென்னை மாவட்டத்தில் 2016–17ம் ஆண்டில் மகளிர் திட்டத்தின் மூலம் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு மாவட்ட அளவில் அதிக கடன் வழங்குவதில் சிறப்பாக செயல்பட்டு, மாவட்ட தேர்வுக்குழுவால் தேர்வு செய்யப்பட்ட வங்கி மற்றும் வங்கிக் கிளைகளைப் பாராட்டி விருதுகள் மற்றும் சான்றிதழ்களை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (19.12.2018) ரிப்பன் மாளிகையில் வழங்கினார்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், சென்னை மாவட்ட இயக்க மேலாண்மை அலகு மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் தனிநபர்களின் வாழ்வாதாரம் மேம்பட பல்வேறு திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் ஒருபகுதியாக, வங்கிகளின் மூலம் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு கடன் இணைப்பு ஏற்படுத்தி தருதல், வட்டி மானியம் பெற்று தருதல் ஆகிய பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

வங்கிகளை ஊக்குவிக்கும் வகையில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு அதிக அளவில் வங்கிக்கடன் வழங்கி வரும் வங்கி மற்றும் வங்கி கிளைகளுக்கு, ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட அளவில் விருது வழங்கி சிறப்பிக்கப்படுகிறது.

அதனடிப்படையில், மாவட்ட அளவில் சிறப்பாக செயல்பட்டு ரூ.67.90 கோடி மதிப்பீட்டில் 1541 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்கிய ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கிக்கும், ரூ.80.73 கோடி மதிப்பீட்டில் 2314 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்கிய ரெப்கோ வங்கிக்கும், மேலும், மாவட்ட அளவில் சிறப்பாக செயல்பட்டு ரூ.30.67 கோடி மதிப்பீட்டில் 770 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்கிய தண்டையார்பேட்டை ரெப்கோ வங்கிக் கிளைக்கும், ரூ.20.01 கோடி மதிப்பீட்டில் 601 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு கடனுதவி வழங்கிய அம்பத்தூர் ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கிக் கிளைக்கும், ரூ.19.91 கோடி மதிப்பீட்டில் 314 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்கிய கே.கே.நகர் ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கிக் கிளைக்கும் ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் இன்று பாராட்டி விருதுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, துணை ஆணையாளர் (கல்வி) திரு.பி.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள், ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி மற்றும் ரெப்கோ வங்கி நிர்வாகிகள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**